**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**<u>ஆணை நாள்: 06.11.2020 ((முற்பகல்)</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**<u>வழக்கு எண்.SA 5543/E/2019</u>**

திரு.S.முருகேசன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 28.01.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 18.03.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 17.06.2019 |

******

**<u>ஆணை</u>**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால் இன்று (06.11.2020) முற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.S.முருகேசன் அவர்கள் தனது

சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.மருதுபாண்டியன், பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மானாமதுரை வட்டம், சிவகங்கை மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 28.01.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் 2018 ஆம் ஆண்டில் அரசு நிலம் ஆக்கிரமிப்புகள் சம்பந்தமாக வந்த புகார் மனுக்களின் எண்ணிக்கை விபரம், புகார் மனுக்களின் அடிப்படையில் கண்டறியப்பட்ட கண்மாய், கால்வாய் நீர் பிடிப்பு பகுதி ஆக்கிரமைப்புகளின் விபரம், புகார் மனுக்களின் அடிப்படையில் கண்டறியப்பட்ட வழிபாட்டு கோவில் ஆக்கிரமைப்புகளின் விபரம், புகார் மனுக்களின் அடிப்படையில் தெருக்கள், சிறு சந்துக்களின் ஆக்கிரமைப்பு விபரம், உயர்நீதிமன்றம் வழிகாட்டுதல் மற்றும் அரசாணை எண்.540 வருவாய் 1D6(2) துறை நாள்.04.12.2014 ன்படி 2018 ஆம் ஆண்டில் பொதுமக்களால் அளிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் அரசு நில ஆக்கிரமைப்புகள் அகற்றப்பட்ட அரசு நிலங்களின் விபரம், அரசு நிலம் ஆக்கிரடிமைப்பு அகற்றலுக்கு எதிராக நீதிமன்றம் தடை உத்தரவு பெறப்பட்ட அரசு நில ஆக்கிரமைப்புகளின் விபரம் உள்ளிட்ட 5 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 25.02.2019 மற்றும் 08.05.2019 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 18.03.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 17.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாக தொலைபேசி வாயிலாக வாக்குமூலமாகத் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

> **மேல்முறையீட்டாளர் 28.01.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிய தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை**

அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**வழக்கு எண்.SA 5543/E/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மானாமதுரை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

**மனுதாரர்**

Thiru.S.Murugesan,
Flat No.403,
Jandid Tower Shanti,
Park HSG Soc LBS Marg,
Mira road East - 401107
Thane District,
Maharashtra State.

Copy to: Judgement File.
*"VP / PA -10.11.2020"*